பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு: ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

ஸ்ரீ பியாரிலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

6 ] சென்னை—ஞாயிறு, மே 19, 1946. [ விலை. அணா. 2

## காங்கிரஸ் மந்திரிகளுக்கான திட்டம்

இப்போது மறுபடியும் மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபைகள் பதவி ஏற்றுக்கொண்டிருப்பதால், அவைகள் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை அனுசரித்துத் தாங்கள் செய்ய வேண்டிய நிர்மாண வேலைக்கு ஒரு திட்டம் வகுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்தத் திட்டத்தை ஆறு மாதங்களுக்கு முன் நிறைவேற்றிவிட முடியாவிட்டாலும் அதற்குள்ளாகவேனும் முடித்துவிட வேண்டும். அப்போதுதான் அவர்கள், போராட்டம் அவசியப்பட்டு நடைபெறுமானால் அதில் கலந்துகொள்ள வசதியாயிருக்கும். அத்தகைய திட்டம் ஒன்றை காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியோ அல்லது மத்திய பார்லிமெண்டரி போர்டோ வகுப்பதுதான் பொருத்தமாயிருக்கும். ஆனால் அது கூடிய சீக்கிரம் நடைபெறும் என்று தோன்றாததால் தேசீய நிர்மாணத் திட்டம் ஒன்றை மந்திரிகளிடம் பணிவுடன் சமர்ப்பிக்கத் துணிகின்றேன்.

அந்தத் திட்டத்தின் பிரதான அம்சங்களை மட்டும் கீழே தருகின்றேன் :—

(1) கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு உயர்ந்தபட்ச ஸ்தல சுயாட்சி அதிகாரங்களைக் கொடுத்து அவைகளைப் புத்துயிர் பெறவும் புத்துணர்ச்சி பெறவும் செய்ய வேண்டும். ஸ்தல நிலைமைகளைச் சரியாகக் கவனித்து, அதிகாரங்களை எல்லாம் ஒரே மத்திய நிர்வாக சபைக்கு வைத்துக் கொள்ளாமல் கீழ் சபைகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் கொள்கையைத் தைரியமாக வகுக்க வேண்டும்.

(2) கிராமங்களை எல்லாம் உணவு, உடை முதலிய வாழ்வுக்கு இன்றியமையாத வசதிகள் விஷயத்தில் பிறரை எதிர்பார்க்காத நிலைமையில் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும்படி செய்ய வேண்டும். இந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டு, நூற்றல், நெய்தல், கடுதாசி செய்தல், நெல் குத்தல், எண்ணெய் ஆட்டுதல் போன்ற குடிசைத் தொழில்களை ஆரம்பிக்கவும் பணம் உதவி ஆதரிக்கவும் வேண்டும். அதற்காக மந்திரிகள் உடனே அகில இந்திய சர்க்கா சங்கம், அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களின் உதவியையும் யோசனைகளையும் தேடிக் கொள்ள வேண்டும்.

(3) கூட்டுறவு முறையில் பயிர் செய்யவும், கூட்டுறவு முறையில் விளை பொருள்களை விற்கவும் ஏற்பாடுகள் செய்யத் தீவிரமான முயற்சிகள் செய்யவேண்டும். குறைந்த காலக் கடன்களும் நெடுங்காலக் கடன்களும் குறைந்த வட்டிக்குக் கிடைக்கும்படியாக ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

(4) நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழுது பயிரிடுவோர்க்குப் பரிபூரணமான பாதுகாப்புக் கிடைக்கும்படியாக இப்போதுள்ள நில உரிமை முறைகளை அடியோடு மாற்றி அமைக்கவேண்டும். எல்லா மாகாணங்களிலும் அங்கங்கே உள்ள நிலைமைக்குத் தக்க மாற்றங்களுடன் கூடுமானவரையில் "கிராமத்தார்க்கு நில உரிமை" என்ற முறையை ஏற்படுத்த வேண்டும். (இதன் விபரங்களை "இந்தியாவின் பொருளாதார அபிவிர்த்திக்கான காந்தியத் திட்டம்" என்ற நூலில் கண்டு கொள்ளலாம்)

(5) வைத்தியத்துக்கு மட்டுமே உபயோகிக்கும் நிபந்தனையுடன் பரிபூரணமாக மதுவிலக்கையும் போதை வஸ்துக்கள் விலக்கையும் ஏற்படுத்தி விட வேண்டும்.

(6) பிரதமக் கல்வி முறையிலும் நடுத்தரக் கல்வி முறையிலும் உடனே ஆதாரக் கல்வியைப் பரிபூரணமாக அமைத்து விடவேண்டும். அப்படிப் பூரணமாக அமைத்து விடுவதற்கு முன்னால்கூட இப்போதுள்ள பிரதமக் கல்விமுறையும் நடுத்தரக் கல்விமுறையும் அடியோடு மாற்றி அமைக்கப் படவேண்டியது அவசியமாகும்.

(7) சகல வகுப்புக்களிலும் கல்வி போதிப்பதற்காக உபயோகிக்கும் பாஷை அந்தந்தப் பகுதியில் பேசப்படும் பிரதான மொழியாகவே இருக்கவேண்டும். ஆங்கிலமொழி உபயோகித்தது போதும், இனிமேல் உபயோகித்தலாகாது. உயர்தரப் பாடசாலையில் படிக்கும் மாணவர்கள்கூட ஆங்கில மொழியில் பாடங்களைப் படியாதபடி உடனே செய்துவிட வேண்டும். கல்லூரிப் படிப்புக்கூட சுதேச பாஷையிலேயே நடைபெறும்படி செய்வதே அரசாங்கத்தின் நோக்கம் என்பதையும் தெளிவாகக் கூறிவிட வேண்டும். தேவையான பாடப் புத்தகங்களைச் சுதேச பாஷையில் தயாரிக்கவும் பிரசுரிக்கவும் ஏற்பாடுகள் உடனே செய்யவேண்டும்.

நாகபுரி சர்வகலாசாலையார் நாகபுரியிலும் வார்தாவிலுமுள்ள ஸெக்ஸாரியா வியாபாரக் கல்லூரிகளில் இந்த வருஷத்தில் இந்துஸ்தானியிலும் மராத்தியிலும் பாடங்களைக் கற்பிப்பதற்கு அனுமதி அளித்திருக்கும் சந்தோஷச் செய்தி இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தகுந்ததாகும்.

(8) மாகாண சர்க்கார்கள் இயன்றமட்டும் ஆரம்பக் கல்வியாகிய ஆதாரக் கல்வியைமட்டும் தங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக்கொண்டு, சர்க்கார் நடத்திவரும் உயர்தரப் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் சர்வகலாசாலைகளுக்கோ அல்லது கல்விச் சங்கங்களுக்கோ மாற்றிவிடவேண்டும்.

உயர்தரக்கல்வி சம்பந்தப்பட்ட மட்டில், சர்க்கார் ஆராய்ச்சிசாலைகளையும் கைத்தொழிற் பாடசாலைகளையு மட்டுமே நடத்தி வரவேண்டும்.

(9) மந்திரி சபைகள் தங்கள் மாகாணங்களிலுள்ள இயற்கை வசதிகளையும் உலோக வசதிகளையும் பரிபூரணமாக அபிவிருத்தி செய்து, கூடுமானவிடங்களிலெல்லாம் மூலக்கைத்தொழில்களைச் சர்க்காருக்குச் சொந்தமாக வைத்துக்கொண்டு விருத்தி செய்து வரவேண்டும்.

(10) பொது ஜனங்களுடைய, அதிலும் முக்கியமாகக் கிராம ஜனங்களுடைய தேக சுகத்தை அபி

விர்த்தி செய்வதற்காக நாட்டு வைத்திய முறைகளையும், இயற்கைச் சிகிச்சை முறைகளையும் ஆதரித்து ஜனங்களிடம் பரவுமாறு செய்ய வேண்டும். கூடுமான வரையில் ஒவ்வொரு கிராமத்திலும் குடிசை வைத்திய சாலைகளும், பிரசவ சாலைகளும் ஏற்படுத்த வேண்டும். கிராமாந்தரங்களில் சேவை செய்ய வேண்டிய வைத்தியர்களையும், மருத்துவச்சிகளையும் பயிற்றுவிப்பதற்காகத் தனியாகப் பாடசாலைகளை அமைக்க வேண்டும்.

(11) வரி விதிப்பு முறையை நேரடியானதாகவும் நியாயமானதாகவும் செய்வதற்காக மாற்றியமைக்கவேண்டும். சர்க்கார்கள் வரவு செலவு திட்டத்தில் வரவும் செலவும் சரியாகவே இருக்கவேண்டும் என்று கவலைப்படாமல் அவசியப்படும்பொழுதெல்லாம் கடன்வாங்கப் பின்னடையலாகாது.

(12) தொழிலாளருடைய க்ஷேமாபிவிருத்தித் திட்டங்கள் அமைப்பதில் விசேஷமான கவனம் செலுத்தவேண்டும்.

(13) இந்துஸ்தானி மொழியை நாகரி லிபியிலும் உருது லிபியிலும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(14) இப்போதுள்ள நியாய விசாரணை முறையானது அனாவசியமாக வழக்குகள் உண்டாவதை ஆதரிப்பதாக இருக்கின்றது. அதிகச் செலவில்லாமலும், நியாயமாகவும், அதிகக் காலதாமதமில்லாமலும் நடக்கும்படியாகப் பஞ்சாயத்து சபைகள் வரைப் படிப்படியாகப் பல விசாரணை மன்றங்கள் ஏற்படுத்த வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் மத்யஸ்தம் செய்து வழக்குகளை எல்லாம் தீர்த்துக் கொள்வதையே சர்வ சாதாரணமான பழக்கமாகச் செய்து விடவேண்டும்.

(15) பிரிட்டிஷ் சிறைச் சாலைகள் பயங்கரமான ஸ்தாபனங்களாக இருக்கின்றன. அவைகளே குற்றவாளிகளைச் சிருஷ்டிப்பதாகவும் இருக்கின்றன. குற்றவாளிகளைச் சீர்திருத்தும் ஸ்தலங்களாகவே மாற்றி அமைக்க வேண்டும்.

நான் இப்போது மந்திரிகள் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் எல்லாவற்றையுமே சொல்லி விட்டதாக எண்ண வேண்டாம். அந்தந்த இடங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கவாறு இன்னும் பல சீர்திருத்தங்களை அமைத்துக் கொள்ளலாம். இப்போது நேரவிருக்கும் உணவுப் பஞ்சமேதான் மந்திரிகளுடைய முதற் கவலையாக இருக்க வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. ஆயினும் இந்தியாவில் தரித்திரத்தையும் சமூகச் சீர்க்கேட்டையும் நீக்கினாலன்றி நிரந்தரமாகப் பயன்கள் தரக்கூடிய காரியங்கள் எதையும் சாதித்துவிட முடியாது. அதனால்தான் தேசிய வாழ்வின் சகல துறைகளிலும் தீவிரமாக நிர்மாண வேலை செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

வார்தா, ஸ்ரீமான் நாராயண் அகர்வால்.
5—8—46.

## பரிபூரண மதுவிலக்கு

நமது தேசத்தில் இப்பொழுது மாகாணங்களில் தேசீய அரசாங்கங்கள் முழு மூச்சாக நடக்க ஆரம்பித்து விட்டன. நல்ல வேளையாக மதுவிலக்கு விஷயத்தில் காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீகுக்கும் அபிப்பிராய வித்தியாசமில்லை. இந்த அரசாங்கங்கள் மட்டுமின்றி சமஸ்தானங்களுங் கூட எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே மாதிரியாகக் காரியம் நடத்துவதானால், இந்தியாவில் மதுபானம் அரை நொடியில் நின்று போகும். லட்சக் கணக்கான குடும்பங்கள் வாழ்த்தும். காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்த பிறகு மாகாணங்களில் ராணுவ அமுல் என்று சொல்லத்தக்க விதமே ஆட்சி நடந்தது. அப்பொழுது கவர்னர்களும் அவர்களுடைய ஆலோசகர்களும், காங்கிரஸ் மந்திரி சபைகளில்சில மேற்கொண்டிருந்த மதுவிலக்குக் கொள்கையை அடியோடு மாற்றிவிட்டு அதற்காக வசூலான வரிப் பணத்தை வேறு வகையில் செலவு செய்து கொண்டது அவர்களுக்கு அழகு செய்யவில்லை. இப்போது மாகாண மந்திரி சபைகள் மறுபடியும் மதுவிலக்கையும், அபின் விலக்கையும் மேற்கொள்ள வேண்டும். அதற்காகச் சட்டம் செய்து விடுவதோடு திருப்தியடைந்து விடக்கூடாது. மதுவால் விளையும் கேடுகளைக் குடிகாரருக்கு எடுத்துச் சொல்ல ஏற்பாடுகளைச் செய்யவும் அவர்கள் குற்றமற்ற விதத்தில் பொழுது போக்குவதற்கும் ஆரோக்கியம் தரக்கூடிய பானங்கள் உபயோகிப்பதற்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவும் வேண்டும். மதுபானக் கடைகளையும் அது சாத்தியப் படாவிட்டால் அவற்றை அடுத்துள்ள இடங்களையும் பொழுது போக்குவதற்கும் பலகாரங்கள் உண்பதற்குமாய் உபயோகப் படுத்த வேண்டும். இந்த மாதிரியான நிர்மாண வேலையை மேற்கொண்டால் அதனால் மதுவிலக்கும் சித்தியாகும், நாசமாய்ப் போய்க் கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கான குடும்பங்களும் க்ஷேமம் அடையும், அரசாங்கத்திற்கும் நல்லதோர் வருமான வழியாகவும் இருக்கும்.

அத்துடன் கள் இறக்குவதை நிறுத்தி அதற்குப் பதிலாக பதனீர் இறக்கி அதைக் கருப்புக்கட்டியாகச் செய்து, மலிவாகச் சர்க்கரை வேண்டி நிற்கும் ஜனங்களுக்கு விற்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். பதனீரிலிருந்து செய்யும் கருப்புக்கட்டி கரும்புச் சாறிலிருந்து செய்யும் சர்க்கரையைவிட எந்த விதத்தில் விரும்பத் தகுந்தது என்பதை ஏற்கனவே 'ஹரிஜன்' பத்திரிகையில் சொல்லியிருக்கிறோம்.

லட்சுமணபுரி பேஜாபாத் ரோட்டிலுள்ள "பெண்கள் கிறிஸ்துவ மதுபான ஐக்ய சங்கத்தார்" அனுப்பியிருக்கும் சுற்றுக் கடிதமொன்றைப் பார்த்தே இந்த யோசனைகளை எழுதலானேன். அந்தக் கடிதத்தில் வாலிபர்கள் செய்யக்கூடியது யாது? என்ற தலைப்பின் கீழ் மாணவர்க்குக் கூறியிருக்கும் யோசனைகளைக் கீழே தருகிறேன்.

(1) சகல போதை வஸ்துக்களையும் வழக்கம் உண்டாய்விடக் கூடிய புகையிலை போன்ற வஸ்துக்களையும் அறவே ஒழித்து விட விரதம் கொள்ளுங்கள்.

(2) பாடசாலைப் படிப்புத் திட்டத்தில் பரிபூரணமாக மதுவும், போதை வஸ்துக்களும் விலக்குவதற்கான கல்வியைச் சேர்க்க வேண்டும் என்று கேளுங்கள்.

(3) பயிற்சி பெறுங் காலத்தில் போதை வஸ்துக்களால் உண்டாகும் தீமைகளைப் பற்றிப் பொது ஜனங்களுக்குப் போதிப்பதற்கான மதுவிலக்குப் பிரசாரம் உட்பட சமூக ஊழியம் செய்ய இடந்தருமாறு கேளுங்கள்.

(4) கிராமங்களிலுள்ள ஜனங்கள் சிறு தொகையேனும் சிக்கனம் செய்ய வேண்டும் என்ற இயக்கத் திட்டத்தில் சகல போதை வஸ்துக்களையும் அறவே விலக்க வேண்டும் என்ற விஷயத்தை வற்புறுத்த வேண்டும் என்று சிபார்சு செய்யுங்கள்.

(5) தேச மக்களுக்கு அவசியமான உணவுப் பொருள்களைச் சாராயம் வடிப்பதற்காக வீணாக்கும் அநியாயத்தை எதிருங்கள்.

(6) மிதபானச் சங்கத்துடன் சேர்ந்து கொள்ளுங்கள். பெண்கள் மிதபானச் சங்கம் இந்தப்

போரை இந்தியாவில் 14 வருஷங்களாக நடத்தி வருகின்றது. அதற்கு உங்கள் அபிமானமும் ஆதரவும் தேவை. அதன் கொள்கை "கடவுளுக்காகவும், குடும்பத்துக்காகவும், தேசத்துக்காகவும் உழைப்பது" என்பதாகும்.

(7) மிதபானம் சம்பந்தமான பிரசுரங்களை உபயோகப்படுத்துங்கள். ஆண்டுக்கு 2 ரூபாய் அனுப்பினால் ஜனங்களுக்கு வினியோகிப்பதற்காக ஹிந்தியிலும், உருதுவிலும் வேறு சில சுதேச மொழிகளிலும் மாதம் 100 துண்டுப் பிரசுரங்கள் வீதம் அனுப்புவார்கள். பொது ஜன உபயோகத்துக்கான புஸ்தக நிலையங்கட்கும், மாணவர்கட்கும் மட்டும் ஆண்டுக்கு ஒரு ரூபாய்ச் சந்தாவுக்கு "மிதபானச் செய்திகள்" என்ற ஆங்கில மாதச் சஞ்சிகை கிடைக்கும்.

(8) இத்தகைய சேவை செய்வதற்கு விடுமுறைக் காலமே ஏற்றதாகும்.

(9) உண்மையான தேச பக்தர்களைப் போலத், தேசத்துக்கு என்ன சேவை அளிப்பது என்பதை மட்டுமே எண்ணுங்கள், அதனால் சொந்தத்துக்கு என்ன நன்மை கிடைக்கும் என்பதை எண்ணாதீர்கள்.

ஸிம்லா, மோ. க. காந்தி.
7—5—'46

## ஆயுர்வேத சிகிச்சையும் இயற்கை சிகிச்சையும்

ஆயுர்வேத, வனஸ்பதி சாஸ்திரப் போதாகாசிரியர் வைத்திய வல்லபராம் எழுதுகிறார் :—

ஆங்கில சிகிச்சை முறையுடன் ஆயுர்வேத முறையைச் சேர்த்தால். ஆயுர்வேத விஞ்ஞானத்தின் இன்றியமையாத அம்சங்கள் எல்லாம் அநேகமாகச் சேதமடைந்து விடுகின்றன. ஆயுர்வேத சிகிச்சையானது ஐம்பூதங்களை அஸ்திவாரமாக உடையது. காற்றைத் தவறாக உபயோகித்தால் வாதமும், நெருப்பைத் தவறாக உபயோகித்தால் பித்தமும், ஜலத்தைத் தவறாக உபயோகித்தால் கபமும் உண்டாகின்றன. ஆயுர்வேத சிகிச்சை இந்த அஸ்திவாரமான விஷயங்களை அறிந்திருப்பதைப் பொறுத்தே இருக்கின்றது. அதனால் நோய்களுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சை காற்று, ஒளி, ஜலம் ஆகியவற்றைச் சரியான முறையில் உபயோகிப்பதே என்று ஆயுர்வேத சிகிச்சை கூறுகின்றது. இயற்கையின் விதிகளைத் தவறாமல் அனுசரிப்பதற் கனுகூலமாக மதவிஷயமும் அவசியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். ஆயுர்வேதத்தில் பத்தியம் என்பது மிகவும் நிச்சயமான நோய் நிவாரண சாதனமாகும். அதன் உட்பொருள் யாதெனில் நோயைப் போக்குவதற்கு இயற்கை விதிகளைச் சரியாக அனுஷ்டிக்கவேண்டும் என்பதே.

"பத்திய மின்றேல் மருந்தால் என்ன பயன்? பத்தியமின்றேல் வேறு மருந்து எதற்கு?" என்று வாக்பட்டர் கூறுகிறார்.

நோய் வராமல் தடுப்பதற்கு ராமபஜனையும் தூய்மையான வாழ்வும் பரவுவதைப் போன்ற உயர்ந்ததும் மலிவானதுமான தடுப்புமுறை கிடையாது என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. வருத்தம் தரும் காரியம் யாதெனில் ஆங்கில டாக்டர்களும் யூனானி ஹக்கீம்களும் ஆயுர்வேத வைத்தியர்களும் ராமநாமத்தைச் சஞ்சீவி மருந்தாக உபயோகியாதிருப்பதுதான். தற்காலத்தில் வெளியாகும் ஆயுர்வேக நூல்களில் ராமநாமத்துக்கு இடந்தரவேயில்லை. அப்படியே அவர்கள் ராமநாமத்தை உபயோகித்தாலும், அதை ஒரு 'மந்திரமா'கச் செய்து இப்போதே மூட நம்பிக்கையில் உழன்று கொண்டிருக்கும் ஜனங்களை இன்னும் அதிகமாக உழலுமாறு செய்து வருகின்றன. ஆனால் ராமநாமமே இயற்கை கூறும் விதியாகும். அதை அனுசரிப்பவர் நோயின்றி வாழ்வார். அதை அனுசரியாதவர் நோயால் மடிவார். எந்த விதி நோய் வராமல் செய்யுமோ அந்த விதியே வந்த நோயையும் குணப்படுத்தும். அப்படியானால் ஒழுங்காக ராமநாமத்தைப் பாராயணம் செய்துகொண்டும் தூய்மையாக வாழ்ந்துகொண்டும் இருப்பவர்கள் சிலர் நோயாகின்றதன் காரணம் யாது என்று கேட்கலாம். மனிதன் பரிபூரணமானவன் அல்லன். அதை அடைவதற்காக அறிஞன் முயல்கின்றானேயன்றி அதை எந்தக் காலத்திலும் அடைந்துவிடுவதில்லை. எத்துணைக் கவனமாயிருந்தாலும் தன்னை அறியாமலே இடறி விழுந்து விடுகின்றான். கடவுள் வகுத்துள்ள விதி முழுவதும் தூய வாழ்வு என்பதிலேயே அடங்கி யிருக்கின்றது. ஒவ்வொருவரும் முதன் முதலாக உணர்ந்துகொள்ள வேண்டியது யாதெனில் தம்முடைய சக்திகள் இவ்வளவுதான் என்று தெரிந்துகொள்வதுதான். அந்தச் சக்திகளுக்கு மீறிய காரியம் செய்தால் நோய் வந்துவிடும் என்பது சொல்லத் தேவையில்லை. ஆதலால் உடம்புக்கு வேண்டிய சகல சத்துக்களும் கூடிய உணவை உடம்பின் தேவைக்குத் தகுந்த அளவாக உண்டால் நோய் வராது. அப்படியானால் சரியான உணவு இது என்று தெரிந்துகொள்வது எப்படி? இந்தமாதிரி எத்தனையோ கேள்விகள் எழலாம். ஆனால் எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டிய தத்துவம் யாதெனில் ஒவ்வொருவரும் தமக்குத் தாமே வைத்தியர் என்பதும் தம்முடைய சக்திகளைக் கண்டு அவற்றிற் கேற்ப நடந்துகொள்ளவேண்டும் என்பதுமே. அந்தவிதமாக நடப்பவர்கள் 125 வயதுவரை வாழ்வார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது."

எல்லோர்க்கும் தெரிந்ததாகவுள்ள வீட்டு மருந்து சரக்குக்களையும் சமையல் வாசனைப் பொருள்களையும் இயற்கைச் சிகிச்சை முறையில் சேர்த்துக் கொள்ளலாமா என்று கேட்கிறார்கள். டாக்டர்கள், தாங்களும் இயற்கை விதிகளை ஆராய்ந்து அவற்றின் படியே நடந்துவருவதால் தாங்களே இயற்கைச் சிகிச்சை யாளரில் தலைசிறந்தவர் என்று கூறுகிறார்கள். இந்தமாதிரியாக எல்லாவற்றிற்கும் சமாதானம் கூறிவிடலாம். நான் கூற விரும்புவது எல்லாம் ராமநாமத்தைத் தவிர மற்றவை எல்லாம், உண்மையான இயற்கைச் சிகிச்சைக்கு முற்றிலும் விரோதமானவைகளே என்பதாகும். எவ்வளவுக்கெவ்வளவு நாம் இந்தப் பிரதானமான தத்துவத்தை விட்டு விலகுகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு இயற்கைச் சிகிச்சை முறையினின்றும் விலகுகிறவர்கள் ஆகின்றோம். இந்தத் தத்துவ ரீதியில் பார்த்தால் இயற்கைச் சிகிச்சையானது ஐம்பூதங்களை உபயோகிப்பதிலேயே அடங்கிவிடும். ஆயினும் எந்த வைத்தியராயினும் அக்கம் பக்கத்தில் பணத்துக்காக வின்றிப் பணிக்காகவே விளைவிக்கப்படும் மூலிகைகளை உபயோகிப்பாரானால், அவரையும் இயற்கை வைத்தியராகவே ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அத்தகைய வைத்தியர்களைக் காண்பது எங்கே? இன்று பெரும்பாலோர் பணம் தேடுவதில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ச்சி எதுவும் செய்வதில்லை. அவர்கள் பண ஆசை பிடித்து மூளை வேலை செய்யாத நிலைமையில் இருந்துவருவதால்தான், ஆயுர்வேதம் இவ்வளவு தாழ்ந்த நிலைமையில் இருந்துவருகின்றது. அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதற்குப் பதிலாகச் சர்க்காரையும் ஜனத்தலைவர்களையுமே குறை கூறி வருகிறார்கள். தங்களுடைய குற்றத்தாலேயே ஆயுர்வேத விஞ்ஞானத்தைத் தாழ்த்திவிட்ட வைத்தியர்களுக்கு சர்க்கார் யாதொரு உதவியும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

ஸிம்லா மோ. க. காந்தி
9-5-46

(குஜராத்தியிலிருந்து சுருக்கியது)

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு: ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

மே 19 ஞாயிறு 1946


## பலாத்காரத்தைத் தடுப்பது எப்படி?

கேள்வி:—இங்கிலாந்துக்குத் திரும்பிப்போக விருக்கும் இராணுவ உத்யோகஸ்தர் ஒருவர் என்னிடம் புனாவில் வைத்து இப்பொழுது இந்தியாவில் பலாத்காரம் அதிகரித்து வருவதாகவும், ஜனங்கள் அஹிம்சா வழியைவிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக விலகி வருவதால் பலாத்காரம் இன்னும் அதிகமாக அதிகரிக்கும் என்பதாகவும் சொன்னார். அவர் கூறியதாவது:—

"மேனாட்டாராகிய நாங்கள் ஹிம்சையில் நம்பிக்கை யுடையவர்கள் என்பது மட்டுமன்று, எங்கள் சமூகமே அந்த அஸ்திவாரத்தின் மீதுதான் அமைக்கப் பட்டிருக்கின்றது. அடிமைகளா யிருந்த அநேக ஜன சமூகங்கள் பலாத்காரத்தின் மூலமாகவே சுதந்திரம் அடைந்திருக்கின்றன. இப்பொழுதும் சமாதானமாகவே வாழ்ந்து வருகின்றன. நாங்கள் பலாத்காரத்தைத் தடுப்பதற்காக அணுகுண்டைக் கண்டுபிடித் திருக்கிறோம். அதற்குச் சென்ற மகாயுத்தமே தக்க சான்று. காந்தியடிகள் உங்கள் ஜனங்களுக்கு அஹிம்சா முறையைக் காட்டி யிருக்கிறார். ஆனால் அவர் ஜனங்களை அஹிம்சையை ஏற்றுக் கொள்ளவும் சமாதானமாக வாழவும் செய்யக் கூடிய அணுகுண்டைப் போன்ற சக்தி எதையேனும் கண்டுபிடித் திருக்கிறாரா? பலாத்கார முறையை அனுஷ்டிக்காமல் தடுப்பதற்கு காந்தியடிகளின் அணுகுண்டால் முடியுமா? பலாத்காரத்தை விட்டு விட்டு அஹிம்சையை ஏற்றுக் கொள்ளும்படி ஜனங்களுக்குப் போதிக்கும்படி காந்தியடிகளிடம் சொல்லுங்கள். நாடெங்கும் பரவி வருகின்ற பயங்கரமான பலாத்கார உணர்ச்சியினின்றும் அவர் ஜனங்களை விலக்க முடியாமற் போகுமானால், அவர் வாழ்வின் லட்சியத்தை அடையாமல் வாழ்வு பாழாகிப் போனவர் ஆவார்."

பதில்:—இந்தக் கேள்வியில் அதிகமான மனக் குழப்பமே காணப் படுகின்றது. அணுகுண்டு பலாத்காரத்தைத் தடுத்துவிடவில்லை. ஜனங்களுடைய நெஞ்சு முழுவதும் பலாத்காரம் நிறைந்தே யிருக்கின்றது. மூன்றாவது யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண் டிருப்பதாகக் கூடக் கூறலாம். பலாத்காரமானது உலகத்தில் சமாதானத்தை உண்டாக்கி யிருப்பதாகக் கூறுவது தவறு. அது எந்தக் காலத்திலும் அப்படி உண்டாக்கியதே இல்லை. ஆனால் பலாத்காரம் எதையுமே சாதிக்காது என்றும் சொல்ல முடியாது.

என்னால் பலாத்காரத்தைத் தடுக்க முடியாமற் போனால் அதற்காக நான் பச்சாதபப்பட வேண்டி யிருக்கும் என்னும் விஷயத்துக்கும் அஹிம்சைத் தத்துவத்தின் உண்மைக்கும் சம்பந்தம் கிடையாது. யாருமே பலாத்காரத்தைத் தடுத்துவிட முடியாது. கடவுள் ஒருவரால்தான் முடியும்; நாம் எல்லோரும் அவர் கை ஆயுதங்களே யன்றி வேறல்ல. வெறும் உலோகாயத சாதனங்களைக்கொண்டு பலாத்காரத்தைத் தடுத்துவிட முடியாது. ஆனால் இப்படிச் சொல்வதன் அர்த்தம் அந்தச் சாதனங்களை அந்தக் காரியத்துக்காக உபயோகிக்கக் கூடாது என்பதன்று. ஆனால் கடைசியில் வெற்றி தருவது கடவுள் அருள் ஒன்றேதான். அவர் தம்முடைய விதியின் படியே காரியங்களை நடத்தி வருகிறார். அதனால் அந்த விதியின்படியேதான் பலாத்காரமும் தடுக்கப் பட்டுப் போகும். மனிதனுக்குக் கடவுள் விதி முழுவதும் தெரியாது, தெரியவும் முடியாது. ஆதலால் நாம் நம்மால் இயன்றமட்டும் முயலவே கடமைப் பட்டவர்கள். நாம் இந்தியாவில் நடத்திவரும் அஹிம்சா தர்மமானது வெற்றி காணவே யில்லை என்று சொல்ல முடியாது. அதனால் சோர்வு அடையவும் நியாயமில்லை. அத்துடன் அஹிம்சா தர்மம் யாராலும் அழித்துவிட முடியாத ஆற்றலுடைய மிகப் பெரிய தத்துவங்களில் ஒன்றாகும்.

அந்த லட்சியத்தை நிலைநாட்டுவதற்காக என்னைப் போல் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்து போகலாம். ஆனால் அஹிம்சா தர்மமட்டும் ஒரு நாளும் இறந்து போகாது. அந்த தர்மத்துக்காக உயிர் துறக்கத் தயாராக உள்ளவர்கள் மூலமாகத்தான் அது பரவ முடியும்.

ஸிம்லா, மோ. க. காந்தி
9—5—'46.

[ஹரிஜன சேவக்கிலிருந்து]

## பம்பாயில் கதர் விஞ்ஞானக் கல்லூரி

சரி என்று எது மனத்தில் பதிந்துவிட்டதோ அதை அனுஷ்டிக்கத் தம்மால் இயன்ற முயற்சியெல்லாம் செய்யக் கூடியவர்களில் ஒருவர் திரு. விதல்தாஸ் ஜெராஜனி. நான் 20 வருஷ காலம் தென் ஆப்பிரிக்காவில் இருந்துவிட்டு 1915 ம் வருஷத்தில் தாய் நாட்டுக்குத் திரும்பிவந்த சமயத்தில் அவர் பம்பாயில் பெரிய சுதேசி மளிகை ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார். நான் அவரிடம் அவர் விற்கும் பொருள்கள் எல்லாம் பெயருக்கு மாத்திரமே "சுதேசி" என்பதை விளக்கிச் சொன்னேன். அவருக்கு உடனே விஷயம் விளங்கிவிட்டது. ஆனால் என்ன செய்வது என்பதுதான் விளங்கவில்லை. நானும் அவருக்குப் பிழையைக் காட்டக் கூடியவனாக இருந்தேனே யன்றி, வழியைக் காட்டக் கூடியவனா யிருக்கவில்லை. ஆயினும் எனக்குச் சரி என்று நம்பியபடி நடக்க முயலாமல் சும்மா யிருக்க முடியவில்லை. ஆதலால் அதி சீக்கிரத்தில் கதர் உற்பத்தியில் முழு மூச்சாக ஈடுபட்டேன். திரு. விதல்தாஸ் கதர்க் கடை ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் உற்பத்தியான கதர் அனைத்தும் பம்பாயிலேயே விற்பனை ஆயிற்று. உற்பத்தியான இடத்தில், கதரை அணிபவர்கள் தொகை மிக மிக அற்பமானதாகவே இருந்தது. ஆயினும் கதர் நாளடைவில் பெருகி வளர்ந்து வந்திருக்கும் கதையானது மிகச் சுவை யுடையது. ஆனால் அதை இப்போது கூற விரும்பவில்லை.

இப்போது திரு. விதல்தாஸ், கதரை வெறும் விற்பனைக்காக மட்டுமே உற்பத்தி செய்தல் பிழை என்று கண்டுகொண்டபடியால் கதர் உற்பத்தியைக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்திருக்கின்றார்.

அவர் எனக்கு குஜராத்தி மொழியில் எழுதி யுள்ள கடிதம் ஒன்றில் கூறியுள்ளவற்றை இங்கே சுருக்கித் தருகின்றேன்:—

"ஆதியில் பம்பாயில் ஆரம்பித்த நான்கு கதர்க் கடைகளில் இரண்டு இப்பொழுது கதர் உற்பத்தியைக் கற்றுக்கொடுக்கும் ஸ்தலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இதற்குமுன் அழகு அழகான கதர்த் துணிகளைக் கண்ணாடி ஜன்னல் மூலம் பார்க்கச் செய்து ஜனங்களை உள்ளே வருமாறு கவர்ந்து கொண் டிருந்தோம். இப்பொழுது பருத்தியிலிருந்து நூலை உண்டாக்குவதற்கான சகல சாதனங்களையும் பார்ப்பதற்கு வரும்படியாகச் செய்து வருகின்றோம்.

இந்தக் காரியங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் உள்ளே வந்து கற்றுக்கொள்கிறார்கள். இதுவரை 209 மாணவர்கள் சேர்ந்துளர். சகல முறைகளையும் கற்றுக்கொள்பவர் அநேகமாக ஒழுங்காகவே வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் வேலையைத் திரு. சக்குபாய் மிகுந்த உற்சாகத்துடன் மேற்கொண்டு தமது நேரம் முழுவதையும் அதற்கே செலவு செய்து வருகிறார்.

நெய்வதற்கு "அந்தேரி"ப் பகுதியில் மட்டுந்தான் ஒரு இடம் கிடைத்திருக்கிறது. அங்கே தறிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். பம்பாயில் இடம் கிடைப்பது கஷ்டமாயிருப்பதால் கல்பதேவி ரோட்டிலுள்ள கதர்க்கடையில் பாதியை நெசவு செய்வதற்காக உபயோகித்து வருகிறோம். அந்த வேலைக்காக நிபுணர் ஒருவரை அமர்த்தியிருக்கிறோம். எவ்வளவு தூரம் வெற்றி பெறுவோம் என்பது இனிமேல்தான் தெரியும்.

யுத்த காலத்தில் துணிப்பஞ்சம் ஏற்பட்டிருந்தபடியால் கதர் விற்பனை மிகவும் அதிகமாக ஏறிப்போயிருந்தது. இப்பொழுதுங்கூட சாதாரணமான துணி கிடைப்பது கஷ்டமாகவே இருந்துவருகிறது. உயர்ந்த ரகத்துணிகள் திருட்டுத்தனமாக நம்பமுடியாத அளவு அதிகமான விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. அதனால் கதரை ஜனங்கள் இப்பொழுதும் மலிவானதாகவே கருதுகிறார்கள். நூல் கொடுத்துத் கதர்வாங்கும் முறை இல்லாமலிருந்தால் நம்மால் கதர் கொடுத்து முடியாது; ஜனங்கள் வந்து மொய்த்து விடுவார்கள். கதர்கூடக் கள்ளமார்க்கட்டில் அதிக விலைக்கு விற்கிறதோ என்னவோ தெரியாது.

எவ்வளவுக் கெவ்வளவு நாட்டில் அரசியல் விழிப்பு ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கதருக்குள்ள கிராக்கியும் அதிகப்படுவது எல்லோரும் அறிந்ததாகும். கதரில் நம்பிக்கையிருந்தும் நூற்பதற்கு சோம்பியிருப்பவர் இப்பொழுதே கைராட்டினத்தைச் சுழற்ற ஆரம்பிப்பது நல்லது. இப்போது நூல் நூற்கும் வித்தையைக் கற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய சூழ்நிலை நல்லதாக இருக்கின்றது."

திரு. ஜெராஜனி தந்துள்ள புள்ளி விபரங்களில் விசேஷம் ஒன்றுமில்லை. உலகத்தில் பைத்தியக்காரர்கள் அதிகம் என்று கூறுவோர்க்கு பம்பாயிலும் அத்தகையோர் போதுமான மட்டுமுளர் என்று கூற உரிமை யுண்டு. உயர்ந்த லட்சியத்தில் நம்பிக்கை உடையவர்கள் அத்தகையோராலேயே உலகம் முன்னேற்றம் அடைகின்றது என்று எண்ணுகிறார்கள். சாதாரணமான ஜனங்கள் அடைய இயலாததை அடைய முயல்வோரை வெறும் சமூக பாரமாகவே கருதலாம். ஆனால் ஏதேனும் ஒரு லட்சியத்தால் ஆட்கொள்ளப்பட்டுள்ள பைத்தியக்கார மனிதனே சமூகத்தால் போற்றப் படவேண்டிய பைத்தியக்காரனுவான். அத்தகைய பைத்தியக்காரருடனேயே நான் திரு. விதல்தாஸையும் சேர்க்கின்றேன். சுக போகங்களையே விரும்பும் நகரமான பம்பாயில்கூட, கதரின் ஆற்றலை உணர்ந்துள்ள சிலரையேனும் காண்பது அதிகமான திருப்தியை அளிக்கக்கூடிய விஷயமாகும். ஆயினும் என்றைக்குக் கதரானது கிராமங் கிராமமாகவும், வீடு வீடாகவும் உண்டாக்கப்படவும் உபயோகப் படுத்தப்படவும் செய்கின்றதோ அன்றைக்குத்தான் அது தன்னுடைய முழு வளர்ச்சியையும் அடையும்.

பம்பாயானது தானம் வழங்குவதில் தலை சிறந்த நகராக யிருப்பது போலவே, கதர் உற்பத்தியாகிய கஷ்டமான பணியிலும் தலைமை ஸ்தானத்தை அடையலாம். யார்தான் இந்தப் பொறாமைப்படத் தகுந்த பதவியை பம்பாய் அடையக்கூடாது என்று கூறுவார்கள்? இந்த லட்சியத்தை அடைவதற்காக திரு. விதல்தாஸும் அவருடைய சகாக்களும் அரும்பாடு பட்டு வருகிறார்கள். அவர்கள் கவனமாக இருந்து பிழை ஏற்படும் பொழுதெல்லாம் உடனுக்குடன் திருத்திக் கொண்டு வந்தால் அவர்களுடைய பணி முழு வெற்றியைப் பெற்று விடும் என்பதில் சந்தேகமில்லை.

ஸிம்லா, மோ. க. காந்தி.
9—5—46.

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## தென் ஆப்பிரிக்க தூதுகோஷ்டி

தென் ஆப்பிரிக்காவில்தான் சத்தியாக்ரகம் என்னும் அரசியல் போராயுதம் சிருஷ்டிக்கப் பட்டது. அங்கேதான் இந்திய சமூகமானது தன்னை விரட்டிவிட முயலும் வெள்ளையர்களை அஹிம்சா ஆயுதத்தைக் கொண்டு வெற்றிகரமாக எதிர்த்து வரக்கூடிய சக்தியுடையதாயிருந்து வருகிறது. இப்போது மறுபடியும் "நில உரிமைச் சட்ட"மாகிய அபாயம் உண்டாயிருக்கும் இந்தச் சமயத்திலும் அவர்கள் மறுபடியும் சத்தியாக்கிரக ஆயுதத்தையே உபயோகிப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

சுய மரியாதையுள்ள சமூகமாக வாழ்வதற்குத் தங்கட்குள்ள உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு நடத்தப் போகும் போரில் ஒத்துழைக்கும்படியாகவும், உதவி செய்யும்படியாகவும் தங்கள் தேச மக்களைக் கேட்டுக் கொள்வதற்காக இப்போது தென் ஆப்பிரிக்க தூதுகோஷ்டி ஒன்று வந்திருக்கின்றது. காந்தியடிகளின் தலைமையில் நடந்து, காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் முடிந்த சத்தியாக்கிரகப் போரில் கலந்துகொண்டவர்களில் சிலரும் அந்தத் தூதுகோஷ்டியில் வந்துளர். அதன் தலைவர் திரு. ஸொராப்ஜி ரஸ்டம்ஜி. அவருடைய தந்தையார் காலஞ் சென்ற பார்ஸி ரஸ்டம்ஜியின் பெயர் காந்தியடிகளின் "ஆத்ம சோதனை" என்னும் புத்தகத்தையும் "தென் ஆப்பிரிக்கா சத்தியாக்கிரஹ சரிதம்" என்னும் புத்தகத்தையும் வாசித்தவர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

### சத்தியாக்கிரக யுத்த தந்திரம்

அந்தத் தூது கோஷ்டியார் காந்தியடிகளைப் பல முறை வந்து பார்த்தார்கள். கடைசியாகப் பார்த்தது டில்லியிலுள்ள தோட்டிகளின் சேரியில். அவர்கள் சத்தியாக்கிரகப் போரை ஜயம்பெற நடத்த வேண்டியது சம்பந்தமாகக் காந்தியடிகளிடம் யோசனை கேட்டார்கள். காந்தியடிகள் அவர்களுக்குள் காணப்படும் கட்சிபேதங்களைக் குறித்து விசாரித்தார். அவர்கள், கட்சி பேதங்கள் உண்மையேயாயினும் காந்தியடிகளின் காலத்தில்கூட இருந்ததாகச் சமாதானம் கூறினார்கள்.

அதற்குக் காந்தியடிகள் :

"ஆனால் அந்தக் காலத்தில் எதிரியுடன் சேர்ந்துகொள்ளும் பதர்கள் கொஞ்ச காலத்துக்குப் பின் பிரிந்து போய்விட்டார்கள்; அத்துடன் அந்தக் காலத்தில் பிரமாண்டமான கூட்டங்களை எங்கு வேண்டுமானாலும் கூட்டக் கூடியவர்களாயிருந்தோம். பார்ஸி ரஸ்டம்ஜி 'முறிச் சீட்டு எழுதிக் கொடுத்த' தொழிலாளர்களிடம் போய்ச் சொன்னவுடனே அவர்கள் எல்லோரும் ஏகமனதாய் போரில் கலந்து கொண்டார்கள். அந்தமாதிரி நடக்கும்படி செய்ய முடியுமா, அப்படியானால் வெற்றி உங்களுக்கேதான். அது முடியாவிட்டால் தோல்விதான். உங்கட்கு எல்லாக் கட்சியாருடைய அனுதாபமும் ஆதர

வும் உண்டா? வியாபாரிகள் உங்களை ஆதரிப்பார்களா?"

ஸொராப்ஜி:—"அந்தக் காலத்திலும் அவர்கள் ஆதரித்ததில்லை யல்லவா?"

காந்தியடிகள்—"ஆனால் கச்சேலியா நம்முடன் இருந்தார். அப்படி ஒரு கச்சேலியா இருந்தால்போதும், சகல வியாபாரிகளும் இருந்தது போல்தான்."

ஸொராப்ஜி:—"வியாபாரி வராவிட்டால் போரை ஆரம்பிக்கக் கூடாதோ?"

காந்தியடிகள்:—"அப்பொழுது போர் வேறு மாதிரி நடக்க ஆரம்பித்து விடும். அதன்பின் வியாபாரிகள் அனைவரும் இல்லாமலே அழிந்து போவார்கள்."

அப்பொழுது தூதுகோஷ்டி அங்கத்தினர் ஒருவர்—

'ஆமாம், நம்முடைய சமூகத்தார் சில சமயங்களில் இப்படிக் கஷ்டம் தருபவர்களாகத்தான் இருக்கிறார்கள்' என்று கூறினார்.

மற்றொருவர்:—அதுமட்டுமா? சண்டை யிடுபவர்களாகக் கூடத்தான்."

காந்தியடிகள்:—ஆமாம், எனக்கும் தெரியும். தென் ஆப்பிரிக்கா அன்று இருந்த மாதிரிதான் இன்றும் இருந்து வருகிறது. "இந்திய அபிப்பிராயம்" என்னும் பத்திரிகையில் நான் அந்தக் காலத்தில் முதன் முதலாக எழுதிய கட்டுரையில் "தென் ஆப்பிரிக்காவில் உண்மையான மனிதன் ஒரே ஒருவன் இருந்தால்கூடப் போதும், எல்லோரும் இருந்தது போல்தான். அவன் ஒருவனே உள்ளே யிருந்து சகலத்தையும் முடித்து விடுவான். செல்லாத நாணயங்கள் ஒரு குவியலாக இருந்தாலும் அதில் செல்லக் கூடிய பவுண் ஒன்று இருந்தால் அந்தக் குவியல் அந்த ஒரு பவுண் மதிப்புப் பெறுமேயன்றி அதற்கு அதிகம் பெறாது" என்று எழுதினேன். அதுபோல், தகுதியுள்ள சத்தியாக்ரகி ஒருவர் இருந்தாலும் அவர் காரியத்தை வெற்றியடையச் செய்து விடுவார். அதனால் அத்தகைய தகுதியை உண்டாக்கிக் கொண்டாலன்றிப் போரைத் துவக்க வேண்டாம். எப்படியோ காலந்தள்ளச் சமாளித்துக் கொள்ளுங்கள். அது உங்களுக்குத் திருப்தி யளிக்காது. நீங்கள் வெள்ளைக்காரரைப்போல சரி சமமாகச் சுயமரியாதையுடன் வாழவே விரும்புவீர்கள். அப்படியானால் நீங்கள் அஹிம்சை எதிர்ப்புக்கு வேண்டிய தகுதியை உண்டாக்கிக் கொள்ளவேண்டும்."

அதன் பிறகு, ஆரம்பிக்க உத்தேசிக்கும் சத்தியாக்கிரகத்தை எந்த முறையில் அனுஷ்டிப்பது என்பதுபற்றிய விவாதம்நடந்தது. இந்தியர்கள் உட்காரக் கூடாது என்று தடுக்கப்பட்டுள்ள ரயில் வண்டிகளில் உட்கார்ந்து சத்தியாக்ரகம் செய்வது கூடவே கூடாது என்றும் யாதொரு சந்தேகத்துக்குமிடமின்றியும் தெளிவாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபடக்கூடிதாயுமுள்ள காரியத்தைப்பற்றியே சத்தியாக்கிரம் செய்ய வேண்டும் என்றும் காந்தியடிகள் கூறினார்.

### சுதேசிகள் உறவு

அதன்பின், இந்தியர்கள் தென் ஆப்பிரிக்க சுதேசிகள் இருவர்க்கு மிடையிலுள்ள உறவைப்பற்றி பேசினார்கள். காந்தியடிகள் சிறிது காலத்துக்கு முன் லண்டனில் நடந்த "மேற்கு ஆப்பிரிக்கா சம்மேளன"த்துக்கு செய்தி அனுப்பத் தாம் மறுத்துவிட்டதன் காரணத்தைக் கூறினார்.

"அவர்கள் தங்கள் போரை ஐரோப்பிய முறையிலேயே நடத்த எண்ணி யிருக்கிறார்கள். அவர்கள் அஹிம்சையை அனுஷ்டிக்க மாட்டார்கள் போலிருக்கிறது. ஆனால் யாரேனும் அவர்களுக்கு அஹிம்சா ஆயுதத்தை உபயோகிக்கக் கற்றுக் கொடுக்காவிட்டால் என்றேனும் ஒரு நாள் கறுப்புஜாதியார் எல்லோரும் வெள்ளை ஜாதியாரை எதிர்த்துப் பழிவாங்கியே தீருவார்கள்."

அப்பொழுது தூதுகோஷ்டி மெம்பர்களில் ஒருவர்—

"நாங்கள் ஜுலுக்களுடனும் பண்டுக்களுடனும் பழகவேண்டும் என்று கூறுகிறீர்கள். அப்படியானால் நாங்கள் வெள்ளையரை எதிர்க்கும் ஒரு பொதுவான போரில் அவர்களுடன் கலந்துகொள்ள வேண்டும் என்று அர்த்தமாகு மல்லவா?" என்று கேட்டார்.

காந்தியடிகள்—"ஆம், நீங்கள் அவர்களுடன் சேர்ந்துகொள்ள வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். அதன் பொருள் யாதெனில் நீங்கள் அஹிம்சா சக்தியை வளர்த்துக் கொண்டுவிட்டால் அவர்களை உங்கள் ஆதரவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே யாகும். நீங்கள் அவர்களுக்கும் அஹிம்சையில் நம்பிக்கை உண்டாகுமாறு செய்தால் நலமாகும். அப்பொழுது நீங்கள் அவர்களுடைய ரட்சகர்கள் ஆவீர்கள். அதல்லாமல் நீங்கள் அவசரப்பட்டு ஏதேனும் தலைகால் தெரியாமல் செய்துவிட்டால் அதனால் நீங்களும் அழிந்து போவீர்கள், அவர்களும் அழிந்து போவார்கள். அவர்களுடைய ஸ்லோகம் இப்போது "ஆசியா ஆசியர்க்கே" என்பது மன்று, "ஆப்பிரிக்கா ஆப்பிரிக்கர்க்கே" என்பது மன்று, உலகிலுள்ள சகல அடிமை சமூகங்களின் ஒற்றுமையே யாகும். அந்த சமூகங்களுக்கெல்லாம் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு இந்தியாவையே சேர்ந்தது. அஹிம்சையானது முன்னிலும் அதிகமாக இப்பொழுது நம்முடைய மனம் முழுவதிலும் நிறைந்திருந்தால்தான் அந்தப் பொறுப்பை இந்தியாவால் ஏற்க முடியும். நம்முடைய போரைப் பலவழிகளிலும் நடத்தி அதன்மூலம் நம்மை அந்தப் பொறுப்பை ஏற்கத் தகுந்தவர்களாக ஆக்கிக் கொள்ள முயன்று வருகின்றேன். இந்தியாவானது ஆங்கில ஆட்சியினின்று விடுதலை பெறுவதற்கு மட்டுமின்றி அதன் பிறகும் அஹிம்சாத் தத்துவத்தை அனுஷ்டித்து வந்தாலன்றி அடிமைப்பட்டும் சுரண்டப்பட்டும் அல்லலுறும் நாடுகளுக்குத் தீவர்த்தி பிடித்து வழிகாட்ட முடியவே முடியாது."

தூதுகோஷ்டியின் மற்றொரு மெம்பர் கூறினார்:—

"தென் ஆப்பிரிக்கா முழுவதிலும் சமுதாயஜாதியுணர்ச்சி எழுந்து கொண்டிருக்கின்றது. இந்தியர்கள் பண்டுக்களை உபயோகித்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய கிராமங்களுக்குத் தங்களுடைய குழந்தைகளை அனுப்புகிறார்கள். ஆனால் தங்களையும் சுதேசிகள் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறார்கள். அதனால் அந்த பண்டுக்கள் இந்தியர்களை ஆணவம் பிடித்தவர்களாகவே கருதுகிறார்கள். இந்தியர்கள் அவர்களிடமிருந்து பெறும் நன்மைக்குத் தக்க வண்ணம் அவர்களுக்கு நன்மை செய்கிறார்க ளில்லை. அதனால் அவர்கள் நம்மை வெறுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்கள் அதை உபயோகித்து இந்தியர்களுக்கும் பண்டுக்களுக்கு மிடையில் வேற்றுமையை வளர்க்க முயன்று வருகிறார்கள்."

காந்தியடிகள்:—"அதில் வெள்ளைக்காரர்கள் வெற்றி யடைந்தால் அந்த நாள் உங்களுக்கு அழிவு நாளே யாகும். இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் காரணம் நீங்கள் எல்லோரும் பணதெய்வத்தை வழிபட்டு வருவதே."

அப்போது திரு. கிறிஸ்டோபர் "அதைப் பார்த்ததேயில்லையே, அப்படி யிருக்க வழிபாடு செய்வது எங்ஙனம்?"—என்று கேட்டார்.

காந்தியடிகள்:—காண்பது வேறு வழிபடுவது வேறு; கடவுளைக் காண்கிறோமா, அப்படி யிருந்தும் வழிபட வில்லையா?"

### தலைவர்களை உண்டாக்கிக்கொள்ளுங்கள்

அதன் பிறகு தூது கோஷ்டியார் வழிகாட்டி நடத்துவதற்காகத்தலைவர் ஒருவரை இந்தியாவிலிருந்து அனுப்ப முடியுமா என்று கேட்டார்கள். அதற்குக் காந்தியடிகள் அவர்களேதான் தலைவரை உற்பத்தி செய்துகொள்ளவேண்டும் என்று கூறினர். தக்க தருணத்தில் தலைவர்கள் தோன்றுவார்கள். அந்தப் பணிக்காகத் தன்னுடைய மக்களை பயிற்றுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் தங்கள் படிப்பை முடித்துக்கொண்டதும் இந்தியாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று அங்கேயே குடியேறியிருந்து கொண்டு இந்தியர்க்குச் சேவை செய்யவேண்டும் என்றும் தம் குமாரர் மணிலாலிடம் சொல்லிக் கொண்டிருப்பதாகக் காந்தியடிகள் கூறினர்.

தென் ஆப்பிரிக்காவில் பிறக்கும் இந்தியக் குழந்தைகளைத் தேச சேவைக்காகப் பயிற்றுவிக்க விரும்பினல் அவர்களை "லவ்டே", "ஹேர்கோட்டை" என்னும் இடங்களுக்கு அனுப்பக் கூடாது என்றும் தாம் தம்முடைய குழந்தைகளை அங்கே அனுப்ப மறுத்து விட்டார் என்றும் காந்தியடிகள் கூறினர்.

டில்லி  பியாரிலால்.
8—5—46

### ஹரிஜன் சமையற்காரர்

காங்கிரஸ் மகாசபை அடுத்ததடவை கூடும் போது சகல சமையல்க்காரரும் ஹரிஜனங்களாகவே இருக்கவேண்டும் என்றும் அதற்காகச்சுத்தமாகவும், நம்முடைய எளிய தேசத்துக்குத் தக்க வண்ணம் சுகாதார முறையிலும் சமையல் செய்வதற்கான வித்தையைக் கற்றுக்கொடுத்துப் போதுமான ஹரிஜனக் சமையல்காரர்களைச் தயார் செய்யவேண்டும் என்றும் ஒரு நிருபர் யோசனை கூறுகிறார். காங்கிரஸ்சபை கூடப்போகும் மாகாணத்திலுள்ள காங்கிரஸ்காரர்களே இந்தக் கடமையைச் செய்து பெருமை அடையவேண்டும் என்றும் விரும்புகிறார். காங்கிரஸ் கூட்டம் முடிந்தபின் சமையல்க்காரர்களை வைத்துக்கொள்ளுவதற்கான பணவசதியுடைய காங்கிரஸ்காரர்கள் அந்த ஹரிஜன சமையல்க்காரர்களைத் தங்கள் வீடுகளில் சேர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

இந்தமாதிரி செய்வது தீண்டாமை என்பதுஒழிந்து போய்விட்டது என்பதை நடைமுறையில் காட்டுவதாகும். அந்தமாதிரிச் செய்வதை நான் சந்தோஷமாக வரவேற்கின்றேன். ஆனல் இந்த யோசனையை ஆதரிப்பவர்கள் காங்கிரஸ் மகாசபை கூடும்வரைக் காத்திருக்க வேண்டியதில்லை. அவர்கள் இதுமுதலே ஹரிஜனங்களைச் சமையலுக்கு மட்டுமின்றி சகல வேலைகளுக்கும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமன்று, கூடுமானல் அவர்களைத் தங்கள் குழந்தைகளைப் போலவே பாவித்து தங்களுடன் வைத்துக்கொண்டு தக்க பயிற்சி அளிக்கவும் வேண்டும். எவ்விதக் குற்றமும் செய்யாத உற்றார் உறவினரையே தீண்டத்தகாதவர் என்று ஹிந்து மதமானது மதம் என்ற பெயரால் செய்துவரும் அநீதியை உணர்ந்து எல்லோரும் மனத்தில் உணர்ந்தபடியே செயல்புரிந்தால் மட்டுமே மேற்கூறிய நல்ல காரியம் நடைபெற முடியும்.

ஸிம்லா,  மோ. க. காந்தி.
8—5—46

### அஹிம்சையும் கதரும்

காங்கிரஸ் மகாசபையின் அமைப்பைப் பற்றிய விதிகள் அடியோடு மாறுதல் செய்யப்பட்டு வருகின்றன. பொய்யும் வஞ்சகமும் இல்லாம லிருப்பதற்காகச் செய்யவேண்டிய முதல் மாறுதல், காங்கிரஸ் மகாசபையின் முதல் விதியில் காணப்படும் "நியாயமானதும் சமாதானமானதும்" என்ற மொழிகளையும் கதர் சம்பந்தமான வாக்கியத்தையும் நீக்கிவிடுவதேயாகும். காங்கிரஸ்காரரில் பெரும்பாலோர்க்கு உண்மையிலும் அஹிம்சையிலும் கதரிலும் நம்பிக்கை யில்லை என்பது அனுபவத்திலிருந்து தெரிகின்றது. நான் உண்மையிடமும் அஹிம்சையிடமும் பக்தியுடையவனு யிருப்பதாலும், கதரை அவற்றின் சின்னமாகக் கருதுவதாலுமே இந்த மாறுதல்களைச் செய்யவேண்டும் என்று யோசனை கூறுகிறேன். உண்மையாகவும் அஹிம்சையாகவும் நடப்பதும் கதரை அணிவதும் அவரவர்களுடைய விருப்பத்தையே பொறுத்தவை. அவர்களைக் கட்டாயப் படுத்துவார் யாருமில்லை. ஆனல் இந்தியாவையும் உலகத்தையும் ஏமாற்றுவதுதான் கூடாது. நான் கூறப்போவது முரணுகத் தோன்றினலும், இந்த மாதிரியான திருத்தம் செய்தால்தான், நமக்கு உண்மையிலும் அஹிம்சையிலும் கதரிலும் நம்பிக்கை உண்டாகும் என்று உறுதியாக நம்புகிறேன். நானேகூட இந்த விதிகளை நீக்கிவிடும்படி ஒரு சமயம் பிரேரித்தேன் என்பதை ஞாபகப் படுத்துகின்றேன். நான் தோல்வியுற்றதும் சந்தோஷம் அடைந்தேன். ஆனல் அப்படிச் சந்தோஷம் அடைந்தது தவறு. இந்தத் தடவையும் தோல்வியுற்றால் எனக்கு வருத்தமே உண்டாகும். உண்மை பேசுவதை விட்டு ஏமாற்றுவதையே விரும்புகின்றோம் என்று உலகம் கூறுமலிருந்தால் போதும்.

ஸிம்லா,  மோ. க. காந்தி.
8—5—46.

### நிருபர்களுக்கு

எனக்குத் தினந்தோறும் வரும் கடிதங்கள் ஹரிஜன வாரப்பத்திரிகைகளை ஆரம்பித்த பிறகு நான்கு மடங்காக அதிகரித்து விட்டாலும் சகல கடிதங்களும் படிக்கப்படுகின்றன. ஆனல் என்னல்முடியவில்லை. நானே எல்லாவற்றையும் படிப்பதானல் என்னல் எவ்வித சேவையும் செய்ய முடியாமல் ஆய்விடும். நான் எவற்றைப் பார்க்க வேண்டும் என்று என் ஸிப்பந்திகள் கருதுகிறார்களோ அவற்றையே அவர்கள் என்னிடம் காட்டுகிறார்கள். அநேக கடிதங்கள் பதில் எழுத வேண்டாதவை. பொது ஜன நன்மைக்குகந்த கேள்விகளுக்கு ஹரிஜனில் பதில் எழுதப்படுகிறது. அப்படியில்லாத கடிதங்கள் எழுதாமலிருப்பது நல்லது. அநேகர் மணவாழ்த்துக்கள் அனுப்புமாறு கேட்கிறார்கள். மணமக்களில் ஒருவரேனும் ஹரிஜனமாயிருந்தால்தான் மண வாழ்த்து அனுப்புவதாக ஏற்கனவே எழுதியிருக்கிறேன். அத்துடன் வாழ்த்துக்கள்தாம் வேண்டிய அவசியமென்ன? தம்பதிகள் ஒன்று சேர்ந்து ஊழியம் செய்வதற்காகவே மணம் செய்து கொள்வதாயிருந்தால் அதுவே அவர்களுக்கு வாழ்த்தாக அமைந்துவிடும். சுயநல சுகபோகத்துக்காகச் செய்வதாயிருந்தால் அத்தகையோர் வாழ்த்துப்பெறத் தகுதியற்றவரே யாவர். எதுவாயினும் சரி, பஞ்சமாயிருக்கும் இந்தக் காலத்தில் விருந்துகளுக்காகவும் சுகபோகத்துக்காகவும் பணம் எவ்வளவு செலவு செய்தாலும் தவறேயாகும். மணங்கள் நடப்பது நின்றுவிடாது, ஆனல் அவை எவ்விதத் தடபுடலுமின்றி நடக்க முடியாதா?

ஸிம்லா,  மோ. க. காந்தி
6—5—46.

(ஹரிஜனபந்துவிலிருந்து)

### கேள்வியும் பதிலும்

1. கேள்வி:—காங்கிரஸ் சார்பாகத் தேர்தலுக்கு நிற்க விரும்பும் அபேட்சகர்கள் வழக்கமாகக் கதரை அணிபவர்களாக இருக்கவேண்டும் என்பது காங்கிரஸ் மகா சபையின் விதி. அதனல் அவர்கள் அகில இந்திய சர்க்கா சங்கத்திடம் அத்தாட்சி பெற்ற கதரையேதான் அணியவேண்டும் என்பதும் அதில் அடங்கி யிருக்கிறதல்லவா?

பதில்:—வேறு விதமாக இருக்க முடியாது என்பது என் அபிப்பிராயம்.

2. கேள்வி :—அத்தாட்சி பெருத கதரை விற்கும் வியாபாரிக்கு காங்கிரஸ் கமிட்டிகளில் பதவி வகிக்க உரிமை உண்டா?

பதில்:—அத்தகைய வியாபாரி காங்கிரஸ் கமிட்டியில் பதவி வகிப்பது இருக்கட்டும், அவர் எப்படிக் காங்கிரஸ்காரராகக்கூட இருக்க முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை.

3. கேள்வி :—அந்த வியாபாரி பதவி வகிக்க முடியாது என்பது மட்டுமன்று, காங்கிரஸ் அங்கத்தினராகக்கூட இருக்க முடியாது என்று கூறுகிறீர்கள். அப்படியானல் காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்து கொண்டு, மில்துணி மட்டுமின்றி அன்னியத்துணியையும் விற்று வருபவர்களைப்பற்றி என்னகூறுகிறீர்கள்?

பதில்:—இரண்டாவது கேள்வியின் பதில் மூன்ருவது கேள்விக்கும் பொருந்தும். இதே காரணங்களுக்காகத்தான் நான் கதர் சம்பந்தமான காங்கிரஸ் விதிகளை நீக்கிவிடுமாறு சிபார்சு செய்திருக்கிறேன். நம்மால் அந்த விதிகளின்படி நடக்க முடியவில்லை என்பதை அனுபவத்திலிருந்து கண்டுகொண்டு விட்டோம்.

ஸிம்லா, மோ. க. காந்தி
8—5—46

## மதுபான விருந்துகள்

நாம் பூரண சுயேச்சையை அடைந்துவிடப் போவதுபோல் தோன்றுகிறது. நாம் ஐரோப்பியருடைய பழக்க வழக்கங்களைக் "காப்பி" யடிக்க விரும்புகிரேமே, அதே சமயத்தில் பூரண சுயேச்சையையும் போற்றுவது எப்படி? ஐரோப்பியர்களைப் போல மதுபான விருந்துகள் போன்ற விநோதக் களியாட்டங்கள் நடத்தித்தான் சுயேச்சைக்குத் தகுதி யுடையவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டுமானல் அது இந்தியாவுக்கும் உலகத்துக்கும் கெட்ட நாளாகும். பட்டினியால் வாடிவதங்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு இந்தக் களியாட்டங்களைப்பற்றி என்ன தெரியும்? யாரால் பணம் சம்பாதிக்கிருர்களோ, அந்த ஏழைகள் பட்டினியால் சாகும்போது இந்தியப் பணக்காரர்கள் இப்படி உல்லாசமாகப் பொழுது போக்குவதாக நம்முடைய நாட்டைப்பற்றி பிறர் இழிவாகக்கூற இடந்தரலாகாது.

ஸிம்லா, மோ. க. காந்தி
8—5—46

## எந்த உணவு நல்லது?

சென்ற மகாயுத்தத்தின் கடைசி வருஷத்தில் டென்மார்க் தேசத்தில் ஒரு விசேஷமான சோதனை நடைபெற்றது. அது நமக்கு இப்பொழுதுள்ள உணவு நிலைமையில் நல்லதோர் படிப்பினையைக் கற்பிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஆதியில் டென்மார்க் தேசத்து ஜனங்கள் பெரும்பாலும் சாகபட்சணிகளாகவே இருந்தார்கள். ஆனல் 1880-ம் வருஷ வாக்கில் அமரிக்காவிலிருந்து கோதுமையும் பார்லியும் ஏராளமாக வந்து குவிந்துவிட்டபடியால் அவர்கள் விவசாயத்தில் பல மாறுதல்கள் செய்ய வேண்டியவர்களாகி விட்டார்கள். ஆடுமாடுகள் பன்றிகள் கோழிகள் முதலியவற்றை வளர்க்கவும் முட்டை, பன்றி இறைச்சி, வெண்ணெய் ஆகியவைகளை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யவும் ஆரம்பித்தார்கள். அத்துடன் முட்டையும் இறைச்சியும் அதிகமாகச் சாப்பிடவும் ஆரம்பித்தார்கள்.

ஆனல் யுத்தம் ஆரம்பித்ததும், அமரிக்காவிலிருந்து தான்யமும் கால்நடைத் தீனியும் வருவது தடைப்பட்டுப் போய்விட்டன. டென்மார்க்கின் ஜனத்தொகை முப்பத்தைந்து லட்சமாகவும் கால்நடைகளின் தொகை 50 லட்சமாகவும் இருந்தன. அமரிக்காவிலிருந்து வராதுபோகவே பஞ்ச நிலைமை உண்டாய் விட்டது. அதன்மேல் அரசாங்கத்தார் அந்த உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஆகார ஆராய்ச்சி சாலையின் அத்யட்சராக இருந்த ஹிந்த்ஹீத் என்னும் பேராசிரியரைத் தங்கள் ஆகார ஆலோசகராக நியமித்தார்கள்.

அவர் தீர்மானிக்க வேண்டியிருந்த விஷயம் இது :—இதுவரை தான்யத்தைப் போட்டுப் பன்றியை வளர்த்து அதன் இறைச்சியைச் சாப்பிடவும் செய்தார்கள், இங்கிலாந்துக்கு ஏற்றுமதியும் செய்தார்கள். ஆனல் இப்பொழுது தான்யம் அதிகமாக இல்லாததால், பன்றிகளைக் கொன்றுவிட்டு அவற்றுக்குப் போடும் தான்யத்தை தாங்களே உண்டால் என்ன?

ஆசிரியர் ஹிந்த்ஹீத் அதுவே சரியான மார்க்கம் என்று தீர்மானித்தார். அப்படியே மூன்றில் ஒரு பங்கு பன்றிகளையும் ஆறில் ஒரு பங்கு ஆடுமாடுகளையும் கொன்றுவிட்டார்கள். அவற்றுக்குப் போட்டு வந்த கோதுமைத் தவிட்டைக் கோதுமை மாவுடன் சேர்த்து ரொட்டி செய்தார்கள். இந்த ரொட்டியைத்தான் எல்லோரும் சாப்பிடவேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட்டது. கூழும் காய்கறியும் பால் வெண்ணெய் பழங்களும் சாப்பிட்டு வந்தார்கள். தான்யமோ உருளைக்கிழங்கோ வழங்கப்படாததால் சாராயம் உற்பத்தி செய்யப்படவில்லை. அதனல் முன் குடித்த அளவில் பாதியே குடித்தார்கள். இறைச்சியும் பயிர்வேலை செய்தவர்களுக்கே கிடைத்தது. நகரவாசிகளுக்கு அநேகமாகக் கிடைக்கவில்லை என்றே சொல்லவேண்டும். அவர்களிலும் பணக்காரரேதான் மாமிசம் வாங்கக் கூடியவர்களா யிருந்தார்கள்.

இந்த உணவு சம்பந்தமான விதிகள் எல்லாம் 1917 மார்ச்சில் ஆரம்பமாயின. 1917 அக்டோபர் முதல் 1918 அக்டோபர் வரைக் கண்டிப்பாக அமல் நடத்தப்பட்டு வந்தன.

இந்தவிதமான உணவை உண்ணும்படியாகச் சர்க்கார் சட்டம் செய்ததால் ஆச்சரியமான நன்மைகள் உண்டாயின. 1913-14ல் ஆயிரத்துக்கு 12-5 ஆக யிருந்த மரணவிகிதம் 10-4 ஆகக் குறைந்துவிட்டது. "ஐரோப்பிய நாடு எதிலும் இந்த அற்ப மரண விகிதம் எந்தக் காலத்திலுமே கண்டதில்லை" என்று ஆசிரியர் கூறுகிருர்.

இந்த உணவுச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் ஜனங்கள் தவிடு சேர்ந்த ரொட்டி, தவிடு சேராத ரொட்டி இரண்டும் சாப்பிட்டு வந்தார்கள். ஆனல் ஆசிரியர் ஹிந்த் ஹீத் அதிகப்படியான தவிடு சேர்ந்த ரொட்டியையே உண்ணும்படியாகச் செய்தார். அந்த ரொட்டியில் 'ரை' என்னும் தானியம் 67 சதமானமும், 'ஓட்ஸ்' என்னும் தான்யம் 21 சதமானமும் தவிடு 12 சதமானமும் சேர்ந்திருந்தன.

"அமெரிக்காவிலிருந்து தான்யம் வருவதற்கு முன் டென்மார்க் ஜனங்கள் தவிடுசேர்ந்த ரொட்டிதான் சாப்பிட்டு வந்தார்கள். இப்பொழுது அதில் அதிகப்படியான தவிட்டைச் சேர்த்துச் சாப்பிடுகிருர்கள். தவிடு சேர்ந்த ரொட்டிதான் ஆயிரக்கணக்கான வருஷங்களாக டென்மார்க்கில் தேசீய உணவாக இருந்து வந்தது" என்று ஆசிரியர் கூறுகிருர்.

இந்த விதமான ஆகாரத் திட்டத்தை அனுசரித்ததால் ஜனங்களுடைய ஆரோக்கியம் அபிவிருத்தி அடைந்ததற்குக் காரணம் இறைச்சியும் மதுவும் உண்பது குறைந்து விட்டதே என்று கூறுகிருர்.

தவிட்டில் தாவர ஊன் சத்து மட்டுமின்றி மாமிச ஊன் சத்து மிருப்பதால் தவிடானது இறைச்சியின் ஸ்தானத்திலிருந்துகொண்டு நன்மைசெய்துவந்தது.

"சாகவஸ்துக்களும் பால்வஸ்துக்களும் உண்டால் போதும், அவைகளேதான் ஆரோக்கிய உணவுகள், முட்டையும் இறைச்சியும் அதிகமாக உண்டால் ஆரோக்கியத்துக்குக் கேடே என்று நான் பலவருஷங்களாகக் கூறிவந்தது உண்மை என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது" என்று கூறுகிருர்.

டில்லி, பியாரிலால்.
9—5—46.

அச்சடித்தவர்: பி. அருணசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மணைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர்: ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர்: சின்ன அண்ணமலை.